செ.வெ.எண் - 662 நாள் :- 17-11-11

மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் திரு டி.கே.எம்.சின்னையா அவர்கள் (16.11.2011) காலை 10.00 மணியளவில் சைதை, கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு துறை அமைச்சர் அவர்கள் ஆய்வின்போது கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசுச் செயலர், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

அமைச்சர் அவர்கள் பன்முக மருத்துவமனை, நாய் வளர்ப்புப் பிரிவு, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், உறைவிந்து வங்கி ஆகியவற்றை பார்வையிட்டு விரிவாக ஆய்வு மேற்கொண்டார். நாய் வளர்ப்புப்பிரிவிற்கென ஒதுக்கப்பட்ட ரூ.4.00 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டிடப்பணிகளை பார்வையிட்டு மேலும் சிறப்பாக பணிபுரிய அறிவுறுத்தினார். பன்முக மருத்துவமனையில் ரூ.7.50 இலட்சம் செலவில் நடைபெற்று வரும் பராமரிப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை பார்வையிட்டு தக்க அறிவுரைகள் வழங்கினார்கள். E.C.G., X-Ray Unit ஆகியவற்றின் பயன்பாட்டினை ஆய்வு செய்து சிறப்பாக செயல்படுவதைக் கண்டு பாராட்டினார். இம்மருத்துவமனையில் சராசரியாக 75 முதல் 100 கால்நடைகள் தினசரி சிகிச்சைக்காக வரப்படுவதை கண்டறிந்தார். செயற்கைமுறை கருவூட்டல் பணிகளும் சிறப்பாக செயல்படுவதைக் குறிப்பிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துறை வளர்ச்சிக்காக பல்வேறு அறிவுரைகள் வழங்கினார். கால்நடை மருத்துவத்தில் ஏற்பட்டு வரும் நவீன தொழில்நுட்பங்கள் அனைத்து கால்நடை விவசாயிகளுக்கும் சென்றடைய வேண்டும் என்றும் அலுவலர்களிடம் கேட்டுக் கொண்டார். சைதை, பன்முக மருத்துவமனை வளாகத்தில் துறை தொடர்பான அனைத்து பணிகளும் செவ்வனே நடைபெறவும், மருத்துவமனையின் சேவை கால்நடை வளர்ப்போர்க்கு சீரிய முறையில் சென்றடைய வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் , துறை பணிகள் சிறப்பாக செயல்படுவதற்கு தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9